1999 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லா. சந்தானம், இருக்கையில் இல்லை.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் உங்களுக்கு அனுமதி இல்லை, உட்காருங்கள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: Sir, எனக்கு வாய்ப்பு கொடுங்கள். திரு. சந்தானம் இல்லாததால் எனக்கு அனுமதி கொடுங்கள். One more question. நான் தினமும் இதைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிறேன் Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள்தான் இதைப் பற்றிப் பேசிக்கொண்டேயிருக்கிறீர்களே? சரி, சீக்கிரம் வினாவாகக் கேளுங்கள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருசநாடு பகுதியிலேயும், கம்பம் பகுதியிலேயும் மழை பெய்யும்போது நிலக்கோட்டை தொகுதியில் குன்னாறுங்கோட்டையிலிருந்து சோழவந்தான் வரைக்கும் வெள்ளம் அதிகமாக ஏற்பட்டு அந்தக் கரைகள் எல்லாம் உடைந்து அதனால் பல ஊர்களே அடித்துக்கொண்டு போய்விடுகின்றன. ஆகையினாலே, இந்தத் திட்டத்தை எடுக்கும்போது குன்னாறுங்கோட்டை, சோழவந்தான் வரைக்கும் இந்தத் திட்டத்தைப் போட்டு கரைகளைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: இந்தத் திட்டம் நிறைவேறுகிறபோது அம்மையார் சொன்ன கருத்தும் ஆய்வில் எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 143, திரு. பி.என். சுப்பிரமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

143—

கண் மற்றும் பல் மருத்துவப் பிரிவு தொடங்குதல்

***7616—திரு. பி.என். சுப்பிரமணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்காடு தொகுதி, ஆற்காடு வட்டம், ஆற்காடு நகரத்திலுள்ள அரசு மருத்துவமனையில் கண் மருத்துவப் பிரிவு மற்றும் பல் மருத்துவப் பிரிவு அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆற்காடு தொகுதி, ஆற்காடு வட்டம், ஆற்காடு நகரத்திலுள்ள அரசு மருத்துவமனையில் பல் மருத்துவப் பிரிவு உள்ளது. கண் மருத்துவப் பிரிவு தற்போது இல்லை. உலக வங்கி நிதி உதவியில் ரூ.31 இலட்சம் செலவில் தேசிய கண்ணொளி இழப்புத் திட்டத்தில் 16 படுக்கைகள் மற்றும் அறுவைச் சிகிச்சை அரங்குடன் கூடிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. பி.என். சுப்பிரமணி, இருக்கையில் இல்லை.*

வினா எண் 144, திரு. இரா. மகேந்திரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

144—

அவசர விபத்துப் பிரிவு தொடங்குதல்

***16685—திரு. இரா. மகேந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளியிலுள்ள அரசு பொது மருத்துவமனையில் அவசர விபத்துப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நாட்ராம்பள்ளியில் அரசு பொது மருத்துவமனை செயல்படவில்லை. ஆனால், அங்கு 24 மணிநேரமும் செயல்படும்